2023

No. of Printed Pages : **4**

2023

500963 **6909**

பதிவு எண் | | | | | | | |

முதலாம் ஆண்டு

# தமிழ்மொழி கற்பித்தல்

கால அளவு : 3 மணி நேரம் மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - I

### பிரிவு - அ

**அனைத்து வினாக்களுக்கும் 100 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். 10x2=20**

1. ''உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே''- நூற்பாவை விளக்கி எடுத்துக்காட்டுத் தருக.

2. கல்லெறிந்தான், நீரின்றி - சொற்களைப் பிரித்து எழுதி புணர்ச்சிவிதி கூறுக.

3. <u>பொருளற்றார்</u> பூப்பர் ஒருகால் அருளற்றார்

   அற்றார்<u>மற் றாதல்</u> அரிது

   - கோடிட்ட சொற்களைப் பிரித்து எழுதுக.

4. பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.

   ''வாவி யுறையும் மடவனமே எந்தன்
   ஆவி யுவந்தளித்தா யாதியால் - காவினிடைத்
   தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி என்றுரைத்தாள்
   பார்வேந்தன் பாவை பதைத்து''.

   1. வாவி, கா, பார் - இச்சொற்களின் பொருளை எழுதுக.
   2. இப்பாடலடிகளை உரைநடைப்படுத்தி எழுதுக.

[ திருப்புக

5. பெயரின் பண்புகள் யாவை ?

6. தொழிலாகு பெயர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

7. கல கல, பாடுகோ பாடுகோ பாடுகோ, மட மட, அன்றே யன்றே - சொற்களை வகைப்படுத்துக.

8. வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும் இடங்கள் எவையேனும் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

9. கட்டுரை எழுத விழைவோர் மனதில் கொள்ள வேண்டிய பொது விதிகள் யாவை ?

10. ''திணை வழுவமைதி'' என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **5x4=20**

11. ''தென்றல் அசைந்து வரும் தென் தமிழ்நாட்டில் அமைந்த திருக்குற்றாலம் மலைவளம் படைத்த பழம்பதியாகும். அம்மலையிலே கோங்கும், வேங்கையும் ஓங்கி வளரும். குரவமும், முல்லையும் நறுமணம் கமழும். கோல மாமயில் தோகைவிரித்தாடும். தேனுண்ட வண்டுகள் தமிழ்ப்பாட்டிசைக்கும். இத்தகைய மலையினின்று விரைந்து வழிந்து இறங்கும் வெள்ளருவி வட்டச் சுனையிலே வீழ்ந்து பொங்கும் பொழுது சிதறும் நீர்த்திவலைகள் பாலாவிபோற் பரந்து எழுந்து மஞ்சினோடு சேர்ந்து கொஞ்சிக் குலாவும்''.

-இவ்வுரைப்பத்தியின் மையக்கருத்தையும் அருஞ்சொற்களையும் எழுதுக.

12. கட்டுரையை உரையாடல் ஆக்குவதற்கான வழிமுறைகள் யாவை ?

13. இரண்டாம் வேற்றுமை உருபு பயின்று வரும் பொருள்களை எடுத்துக்காட்டுடன் தருக.

14. கட்டுரை என்றால் என்ன ? அதன் அமைப்பு மற்றும் வகைப்பாடுகள் குறித்து எழுதுக.

15. விளிவேற்றுமை குறித்து நீவிர் அறிந்த கருத்துகளை எடுத்துக்காட்டுடன் விளக்கி எழுதுக.

16. உடம்படுமெய் புணர்ச்சி என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

17. தொழிற் பெயர் என்றால் என்ன ? அதன் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

18. ''தமிழ்த் தென்றல்'' திரு.வி.க குறித்து நீவிர் அறிந்த கருத்துகளை எழுதுக.

## பகுதி - II

## பிரிவு - அ

**அனைத்து வினாக்களுக்கும் ஒவ்வொன்றுக்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **10x2=20**

19. ''விதிகளின் தொகுப்பே மொழி'' என்னும் கருத்தை விளக்குக.

20. ''தமிழ் இரட்டை வழக்கு மொழி'' என்பதை விளக்குக.

21. பேசுதல் திறனை வளர்க்கும் வழிவகைகள் யாவை ?

22. அரையுயிர்கள் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

23. உரைநடைக் கற்பித்தலின் நோக்கங்கள் யாவை ?

24. செய்யுள் நடை என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

25. விரிவுரை முறையின் நிறைகள் மற்றும் குறைகளை எழுதுக.

26. படித்தல் திறன் வளர்ச்சியில் கணினியின் பங்கு பற்றி எழுதுக.

27. ''தமிழ்ப் பேரகராதி'' குறித்து எழுதுக.

28. ஐந்தாம் வகுப்பிற்கான பாடங் கற்பிப்புத் திட்டத்தில் பின்பற்றப்படும் படிநிலைகள் யாவை ?

[ திருப்புக

## பிரிவு - ஆ

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.**
**5x4=20**

29. மொழியும் பால் வேறுபாடும் குறித்து விளக்குக.

30. கேட்டல் திறனை வளர்க்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டியவை யாவை ?

31. செய்யுள் கற்பித்தலின் மூலம் கற்பனைத் திறனை வளர்க்க முடியும் என்பதை எடுத்துக்-காட்டுடன் விளக்குக.

32. ஒப்படைப்பு முறை என்றால் என்ன ? ஒப்படைப்பு அளிக்கும் முறைகள் யாவை ?

33. தொடர்செயல் என்றால் என்ன ? தொடர்செயல் வழங்கும் முறைகள் பற்றி எழுதுக.

34. செய்தி திரட்டும் திறன் குறித்து விளக்கி எழுதுக.

35. பாடத்திட்டம், பாடக்குறிப்பு – வேறுபடுத்துக.

36. நிகண்டுகள் என்றால் என்ன ? உனக்குத் தெரிந்த இரண்டு நிகண்டுகள் குறித்து எழுதுக.

## பகுதி - III

**ஒவ்வொரு வினாவிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்.** **2x10=20**

37. (அ) செய்யுள் கற்பித்தலின் நோக்கங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) குழந்தைகள் எழுதப் பழகுமுன் எவ்வாறெல்லாம் பயிற்சி அளிப்பாய் என்பதை விரிவாக எழுதுக.

38. (அ) நிறுத்திப்படித்தல் என்றால் என்ன ? வாய்விட்டுப் படிக்கும் போது நிறுத்திப் படிக்க வேண்டிய இடங்களை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) தாய்மொழி கற்பித்தலில் நடிப்புமுறை பெறும் இடம் குறித்து விளக்கி எழுதுக.

-oOo-